[2010 மே 10

அந்த மருத்துவமனையை அரசுக்கு ஒப்படைக்கும் நிலை உள்ளது. எனவே, நமது அரசு அங்கே துணை சுகாதார நிலையம் அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து உள்ளாட்சித் துறை மற்றும் சுகாதாரத் துறை ஆகிய இரண்டு துறைகளுடைய அதிகாரிகளும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். உள்ளாட்சி அமைப்பின்கீழ் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் இதுபோன்று கிட்டத்தட்ட 60-க்கும் மேற்பட்ட மருந்தகங்கள் இருக்கின்றன. அவற்றுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்வது குறித்து இரண்டு துறைகளின் அதிகாரிகளுடன் கலந்து பேசி முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 153, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

153—

கால்நடை மருந்தகம்

***107900—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி ஒன்றியம், முருக்கம்பட்டு கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஒன்றியம், முருக்கம்பட்டு கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைத்திட அரசுத் தரப்பில் இதுவரை செயற்குறிப்பு எதுவும் இல்லை.

2010 மே 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணியது எண்ணியாங்கு எய்துகின்ற திண்ணியராக, நினைத்ததை முடிப்பவராக, நம்முடைய முதல்வர் திகழ்கின்றார்கள். மேலவை இவ்வளவு விரைவாக நடைமுறைக்கு வரும் என்று யாரும் நினைத்துப் பார்த்திருக்க முடியாது.

2010-க்குண்டான சிறப்பிலே, மேலவையையும், இந்த அவையையும் சேர்த்து ஒரு Joint Session நடத்துகின்ற ஒரு அற்புதத்தினைக் காண விழைகின்றேன். அதற்கான வாய்ப்பு நிச்சயமாகக் கிடைக்கும் என்று நான் நம்புகின்றேன். அந்த நிலையிலே, சிறப்பு வாய்ந்த இந்தக் காலக்கட்டத்தில், என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதியில், உருக்கப்பட்டு கிராமத்தில்-உருகம்பட்டு என்றுதான் வந்திருக்க வேண்டும்-ஒரு கால்நடை மருத்துவமனையினை அளிப்பதற்கு, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை அந்தந்தப் பகுதிகளில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அப்பகுதியில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனை போன்றவற்றை அமைத்துத் தருகிறது. மேலும், அருகிலே இருக்கின்ற கால்நடை மருந்தகங்களுடைய தூரத்தை வைத்தும் புதிதாக கிளை நிலையங்கள் திறக்கப்படுகின்றன. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஒன்றியத்தில், ஏற்கெனவே இரண்டு கால்நடை மருந்தகங்களும், மூன்று கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. முருக்கம்பட்டு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடை அலகுகள் குறைவாகவே உள்ளன. ஆகவே, எதிர்காலத்திலே கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

[2010 மே 10

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.*

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பிலே மிக முக்கியமான காலகட்டமாக இது விளங்குகின்றது. பொதுவாக, செல்வங்களைச் சொல்லும்போதுகூட, கால்நடைச் செல்வம் என்று சொல்வார்கள். அந்த வகையிலே பாலை தரக்கூடிய பசுக்களுக்கு, சில பேர் முறைகேடாக ஊசி போட்டு பசு வதை செய்கின்ற நிலைமை தமிழ்நாட்டில் இருக்கின்றது என்று பல்வேறு தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. அந்த வகையில் பார்த்தால், ஊசி போட்டபின் பசு தருகின்ற பால் சிறப்பான, தகுதியான நிலையிலே இல்லை என்று கூறப்படுகிறது. இதைத் தடுப்பதற்கு கால்நடை பராமரிப்புத் துறை திட்டம் வைத்திருக்கிறதா? என்ன செய்திருக்கிறது என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Oxytocin Harmone *என்ற ஊசி மருந்தை கால்நடை வளர்ப்போர்கள் சிலர் உபயோகித்து வருவதாகத் தெரிகிறது. அதுவும் சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மட்டும்தான் அந்த ஊசியைப் போடுவதாகத் தெரிய வருகிறது. அப்படி அந்த ஊசியைப் போட்டு கறக்கின்ற பாலினால் பின்விளைவுகள் ஏதும் இல்லை என்றும் கூறப்படுகிறது. இருந்தாலும்கூட, அதுசம்பந்தமான சில விவரங்களைக் கூற விரும்புகிறேன்.* Oxytocin Harmone *மருந்து 5 நிமிடங்களில் மாட்டின் உடம்பிலே அளிக்கப்படுகிறது.* Oxytocin Harmone *மருந்து சுரக்கும் பாலில் கலப்பதில்லை. இது வெளிநாட்டில் நடந்த ஆய்வின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மிக நுண்ணிய அளவில் பாலில் கலந்து வந்தாலும், பால் கொதிக்க வைக்கப்படும்போது,* Oxytocin Harmone *தன்மையிழந்து, செயலிழந்துவிடுகிறது.* Oxytocin Harmone, Schedule H *பிரிவில் வருவதால் மருத்துவரின் மருந்துச் சீட்டு இல்லாமல் மருந்துக் கடைகளில் பொதுமக்களுக்கு நேரடியாக கொடுக்கக் கூடாது. இதை மருந்து ஆய்வாளர்கள்,* Drug Inspector-*கள்தான் கட்டுப்படுத்த வேண்டும்.* Section 12 of Prevention of Cruelty

to Animals Act, *1960-ன்படி, இது ஒரு தண்டனைக்குரிய குற்றம். அரசாங்கத்தால் மாட்டை பறிமுதல் செய்வதற்கும் இதிலே வழியிருக்கிறது. மேலும் ஊசி போடுபவர், பதிவு பெற்ற மருந்தாளுநராக இருக்க வேண்டும். இல்லையென்றால் 6 மாதச் சிறைத் தண்டனையோ அல்லது 1,000 ரூபாய் அபராதமோ விதிக்கப்படும். டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுக்கு கூடுதல் விவரங்கள் வேண்டுமென்றால், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியினுடைய* Dean-*ஆக இருக்கின்ற அவருடைய சம்பந்தியைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

154—

அருங்காட்சியகம்

***121582—திரு. என். மாலைராஜா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஆதிச்சநல்லூரில் தொல்பொருள் ஆராய்ச்சிமூலம் கிடைக்கின்ற பழங்கால கல்வெட்டுக்கள், முதுமக்கள் தாழிகள் ஆகியவற்றைப் பாதுகாத்திட அருங்காட்சியகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆதிச்சநல்லூர் அகழாய்வுப் பகுதியானது தமிழக அரசின் பொறுப்பில் இல்லாமல் மத்தியத் தொல்லியல் துறையின் பொறுப்பில் உள்ளமையால் அருங்காட்சியகம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.*